DEPOSITION OF WITNESS

**In the court of the I Additional District Judge, Tiruchirappalli.**

**O.S.No. 97/2023**

PW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | திரு. சண்முகம் | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | திரு. வைத்தியநாதன் | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **14.06.2024**

**முதல் விசாரணை** :

நான் இந்த வழக்கின் வாதி கோவிலின் மேலாளர் ஆவேன். என் தரப்பு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்.

1. 27.06.1978– அசல் வழக்கு எண்கள் 55 மற்றும் 58 /1977–ல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருச்சியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட **நகல் வாதி தரப்பு சான்றாவணம் 1** ஆகும்.

2. 31.01.1979– மேல்முறையீட்டு வழக்கு எண்கள் 454 மற்றும் 455/1978–ல் திருச்சி, இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வாதி தரப்பு சான்றாவணம் 2** ஆகும்.

3. சொத்து வரி ரசீதுகள் (23) மற்றும் குடிநீர் வரி கட்டண ரசீதுகள் (12) சான்றிட்ட நகல்கள் எண்ணம் (23+12=35). **வாதி தரப்பு சான்றாவணம் 3 வரிசை** ஆகும்.

4. மின்கட்டண ரசீதுகள் (16) எண்ணம். **வாதி தரப்பு சான்றாவணம் 4 வரிசை** ஆகும்.

5. 1995 முதல் 2001 வரை உள்ள காலத்திற்குரிய சொத்து வரி ரசீதின் சான்றிட்ட நகல் **வாதி தரப்பு சான்றாவணம் 5** ஆகும்.

6. 2017 முதல் 2018 வரை உள்ள காலத்திற்குரிய சொத்து வரி ரசீதின் சான்றிட்ட நகல் **வாதி தரப்பு சான்றாவணம் 6** ஆகும்.

7. 15.11.2017 -மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நீதிப்பேராணை மனு எண். WP (MD)No. 21060/2017-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகல் **வாதி தரப்பு சான்றாவணம் 7** ஆகும்.

8. 08.02.2018 -திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டாட்சியரின் செயல்முறை நடவடிக்கைகளின் சான்றிட்ட நகல் **வாதி தரப்பு சான்றாவணம் 8** ஆகும்.

9. 29.07.2022- அன்று வாதி தன் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல். **வாதி தரப்பு சான்றாவணம் 9** ஆகும்.

10. 01.08.2022- அன்று வாதி தன் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வாதி தரப்பு சான்றாவணம் 10** ஆகும்.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.